



## லண்டன் தமிழவை

வழங்கும்

# முத்தமிழாரம்

# 2017

**28.10.2017**

**மாலை 4.45 மணி**

**Greenford Town Hall**
**Ruislip Road**
**London, UB6 9QN**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதி

நலமான உள்ளம் மகிழ்வான வாழ்வு

## HELP LINE & COUNSELLING SERVICES

உடலுக்கு மட்டுமல்ல
உள்ளத்திற்கும்
நெருக்கடிகளுண்டு!!!
விபரீதம் ஏற்படும்
முன் உதவியை
நாடுங்கள்!!!



☎ 0203 3710 006

1.00 pm - 9.00 pm

**இது ஒரு இலவச அந்தரங்க சேவை**

**Ahilan Foundation, Charity Number : 1134912**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஆன்றோர் அறிவும் சான்றோர் சால்பும்
தோன்றாத் துணையாயக் கொண்டது அவையே "

***

## தமிழ்த்தாய் வாழ்த்து

சீருடைச் செந்தமிழ் மகள் வாழி! எம்
சிந்தையில் நிறைந்தே அவள்வாழி!
போருடைப் புறமும் அன்புடை யகமும்
போர்த்த பேரழகாள் புகழ் வாழி!

ஆரமா யியலொடு தேனிசை நாடகம்
அணிந்தவள் சங்கம் தனிலூறிச்
சாரமாய் வடிந்த காவியச் சோலையில்
களிநடம் பயின்றவள் பேர் வாழி!

ஏருடை நிலமும் காருடை வளமும்
தாருடை அரசும் இல்லாமல்
பாரெலாம் அலையும் தமிழரை இணைத்தே
வீறுடைச் செல்வியாய் அவள் வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# About Thamizhavai:

An association of friends sharing the same visions, values, and virtues aiming to promote Tamil language, art, culture, literature and media related skills and talents and a world of cultural diversity with universal love, peace, justice and harmony, leading to eternal happiness.

With the passion, vision and guidance of Thamizhavai's founder and patron, Pulavar Sivanathan, the conceptual ideas behind Thamizhavai took it's physical existence in the form of a building structure at 14 Elmer Gardens, Isleworth, Middlesex during 1998-99.

Formerly constituted in Oxford and established in the year 2000 Thamizhavai was gradually evolving into a structured organisation with proper roles, responsibilities and structure.

## Aims:

* To create environment for developing Tamil diaspora community's art, cultural, business, commercial and communication skills to help Britain's great efforts and activities to promote a multi-cultural society with international understanding , tolerance and unity.

* To bring out young Tamil Talents and skills in creative arts including poetry, literature, journalism, play writing, acting, directing, compering, orating and debating, producing and delivering stage and radio programs.

* To bring in the experienced and skilled personalities within British communities to conserve Tamil Culture and Traditional Values and virtues.

* To conduct workshops and training sessions in the fields listed above utilizing available expertise within the Global Tamil Community.

* To organise cultural functions and celebrations in order to provide opportunities for the young artistes and performers to obtain confidence and to gain experience in their arts and skills.

* To create opportunities to train and develop people to demonstrate leadership qualities, management attributes and team aspirations.

* To help the young and older generations to understand the importance of strengthening their ability and tolerance to withstand the social pressures in living in a multi-cultural diversified society and embrace other cultures whilst trying to preserve their own identity and self-esteem.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுவை பற்றிய ஒரு விபரக் கோவை

## "தமிழுவை" – 1974ஆம் ஆண்டில் பூத்து விரிந்த ஒரு புலவனின் கனவு:

"ஒரு பல்லினக் கலாச்சாரக் சூழலிலும் கூட, ஓரினம் தனது அடையாளத்துடனும் அங்கீகாரத்துடனும் இப்பூகோள முகத்தில் நிலைத்து, உயிர்ப்புடன் வாழ முடியுமென்ற நம்பிக்கையுடன் உலக சமுதாயத்தின் சனநாயக விழுமியங்களையும் மனிதநேயத்தின் மாண்புகளையும் மதித்துப் போற்றிப் பேணவல்ல தேசமாம், "பிரித்தானிய மண்ணில்", பல்லாயிரம் ஆண்டுகளுக்கான தொன்மை கொண்ட உலகச் செம்மொழியையும் எழுத்துச் சுவடிகளுக்குள் அகப்படாத தமிழர் தொல்குடி வரலாற்றுப் பெருமையையும் பேணிப் பாதுகாக்காகவல்ல உலகத் தமிழருக்கான ஒரு தமிழ் விருட்சமாக 'தமிழுவை' என்ற அமைப்பு நிறுவப்பட வேண்டும்".

தமிழ் மொழி, கலை, கவிதை, இலக்கிய பண்பாட்டுத் தொன்மிய, கிராமிய, ஊர்மிய, மரபுகளை, புதிய வீச்சுடனும் புதிய பரிமாணங்களுடனும் நவீன யுக்திகளுடனும் மீட்டுப் பாதுகாத்து நாளைய சந்ததிக்குக் கையளிக்கும் பணியிற் தமிழுவை முன்னின்றுழைத்தல் வேண்டும்.

## தமிழுவையின் முதன்மையான இலக்குகள்

- தமிழ் மொழியினதும் தமிழினத்தினதும் தேச, தேசிய, தெய்வ நிலைப்பட்ட தொன்மை நிறை வரலாற்றையும் இவ்வரலாறு இவ்வுலகிற்கு வழங்கிய மொழி, கலை, பண்பாடு வாழ்வியல் விழுமியங்களையும் உலகப் பரப்பில் வாழும் இன்றைய சந்ததிக்கு மட்டுமின்றி வாழப்போகின்ற நாளைய சந்ததிக்கும் வழங்கிடப் பன்முக முயற்சிகளை எடுத்தல்.

- உலக ஆய்வாளர்களின் பௌதிக ஆய்வுப் பரிமாணங்களுக்குட் சிக்காத தொல்குடி வரலாற்றுத் தேடல்களை ஊக்குவித்து, நிலத்தடியிலும் கடலின் ஆழத்திலும் அமிழ்ந்து கிடக்கும் ஆதி நாகரிகத் தொடர்ச்சிகளையும் ஊடு தொடர்புகளையும் வெளிக் கொணர்தல்.

- வையப்பொதுமறையாம் திருக்குறளையும்... தெய்வப்பெரும் புலவனாம் வள்ளுவப் பெருந்தகையையும் உலகப் பார்வையில் உச்சப்படிக்கு உயர்த்துதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழவை**
**இலண்டன்**



அன்பிற்கும் அணைப்பிற்கும் உரிய என்னருமை உறவுகட்கு! தமிழவை அமைப்பின் வார்ப்பிலும் வடிவமைப்பிலும் வனப்பிலும் வளர்ச்சியிலும் முத்தமிழ்சார் முனைப்பிலும் முயற்சியிலும் இணைந்து இயங்கும் அனைத்துத் தமிழுள்ளங்களையும் தமிழ்த்தாயின் நிழலில் நின்று.... எமது முன்னோரின்கழலடிகளைத் தொழுது கொண்டு... வரவேற்பதில் வாழ்த்துவதில்.. வணங்குதில் இன்புறுகின்றேன்! இறும்பூதெய்துகின்றேன்!

காளிசக்தியின் கட்டளையாலோ.. அல்லேல்..காலத்தின் கருணையாலோ...அல்லேல் இந்த ஞாலத்தின் தேவையாலோ... அல்லேல் தமிழ் ஞானத்தின் பார்வையாலோ... எங்கள் தமிழவை உதித்தது! காற்தடம் பதித்தது! கலை கவிதை படைத்தது! தடைகளை உடைத்துத் தளிர்த்தது! இன்று வரை தழைத்தது!

பதினெட்டு அகவைகள் பயணித்துவிட்ட இத்தமிழவையின் பலமும் வளமும் தெய்வத்தின் திருவருளே! பாதையும் வழிகாட்டலும் பார்வையும் ஒளியூட்டமும் எம்முன்னோரின் குருவருளே!

மாறும் உலகின் மாறாத உண்மைகளை மானிடத்தின் மகிமைதனை.. நாமும் உணர்ந்து நமது நாளைய சந்ததியையும் உணரவைக்க...செம்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்புணர்ந்து சேவைசெய்ய இலக்கமைத்து.. எழுந்த விருட்சமே இலண்டன் தமிழவை என்பேன்!

**'ஆன்றோர் அறிவும் சான்றோர் சால்பும்**
**தோன்றாத் துணையாயக் கொண்டது அவையே'**
எனும் தாரக மந்திரத்தோடு தன்னைத் தக்கவைக்கத்துணிந்து தலைநிமிர்த்திய அமைப்பே தமிழவையெனலாம்!

இதுவரை காலமும் தமிழவையின் இருப்பிற்கும் இதன் வளர்ச்சிக்கும் உதவிய பல தமிழுள்ளங்களை நான் இவ்வேளை என் நெஞ்சில் இருத்தியவாறே இம்மடலை எழுதுகின்றேன்!

1999இலிருந்து இன்றுவரை தமிழவையோடு தம்மை இணைத்துக்கொண்டவர்கள் மட்டுமன்றி... இவ்வமைப்பிற்கு வெளியே நின்றுகொண்டு தமிழவையின் படைப்பு முயற்சிகளுக்கும் முன்னெடுப்புகளுக்கும் தோள் கொடுத்தவர்களை... துணையாக நின்றவர்களையெல்லாம் தமிழவை கண் பனிக்கத் தழுவிக்கொள்கிறது!

எமது தமிழவையையும் எமது படைப்பாக்கங்களையும் வரவழைத்து வரவேற்று வாழ்த்திப் பாராட்டி வளர்க்கும் தாய்த்தமிழகத்தின் தமிழறிஞர்கள் கவிஞர்கள் கலைஞர்களையும் யான் இன்று நினைவு கொள்வதில் பெருமையும் புளகாங்கிதமும் அடைகின்றேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகத்தின் பிரிவின் தகிப்பையும்... தாயக மக்களின் தவிப்பையும்... புலம்பெயர் வாழ்வின் புதுக்கோலங்களையும்... கலையாய்க் கவிதையாய் நாட்டியமாய் நாடகமாய்... வழங்கி வந்த யாம், சந்தித்த சவால்கள் பல! எதிர்கொண்ட இடர்கள் பல! இன்னல்கள் பல! புறக்கணிப்புகள் பல! புறந்தள்ளல்கள் பல!

இவற்றையெல்லாம் தாங்கிடும் பலத்தையும், தவிர்த்திடும் உரத்தையும், பொறுத்திடும் உறுதியையும், கொடுத்த அனைத்து அன்பு உள்ளங்களையும், அவர்களை எமக்களித்த அன்னை தமிழையும், ஆதிபராசக்தியையும் இந்நாளிலும் என்றும் போல் எண்ணி எண்ணி மகிழ்கின்றோம்!

நிகழ்ச்சி... நிர்வாகம்.. நிதி எனும் முத்தளங்களில் இயங்கி எமது மூச்சிற்கும் வீச்சிற்கும் முகங்கொடுத்த நண்பர்களை, உறவுகளை, தம்பிகளை, தங்கைகளை, கலைப்பெருமக்களை, கற்றுணர்ந்த வித்தகர்களை, கண்களில் நீர்சொரிய நன்றிப்பெருக்கோடு நினைத்துக் கொள்கிறோம்!

பட்டியலிட்டு நன்றி செலுத்தத் தொடங்கின் அதன் நீட்டம் வளர்ந்து செல்லும்! ஆகையால் அதனை ஈண்டு தவிர்த்துள்ளேன்!

தமிழவையின் ஆரம்பகாலத்திலும் சரி... இடைக்கால வளர்ச்சியிலும் சரி... இன்றைய இயங்குநிலையிலும் சரி... எம்மோடு பலர் இணைந்து செயற்பட்டு வந்துள்ளார்கள்! இன்னும் செயற்பட்டுகொண்டிருக்கின்றார்கள்!

அரங்கிலும் அலையிலும் ஏட்டிலும் பாட்டிலும் தமிழ்ப்பாடசாலைகளிலும் ஊடகங்களிலும் ஆலயங்களிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிலும் தமிழவையையும் என்னையும் ஈடுபடவைத்த பலரை நான் என்றென்றும் மறக்கமாட்டேன்!

அரங்க நாடகங்கள், வானொலி நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், தாளலய கூத்து, இசை மற்றும் வில்லுப்பாட்டு நிகழ்வுகள், கவியரங்கங்கள், கருத்தரங்கங்கள், பட்டிமன்றங்கள், வெளியீட்டு நிகழ்வுகள் என நீண்டு வளரும் எமது படைப்புகளினை உருவாக்குவதிலும் அதற்கான பயிற்சிகளையும் பட்டறைகளை நிகழ்த்துவதிலும் சளைக்காது இளைக்காது தொடர்ந்து பணியாற்றிவருகின்ற கலைப் பெருமக்களையும் ஆசிரிய மாணவ மணிகளையும் பெற்றோர்களையும் பாராட்ட வார்த்தைகளறியேன்!

வேலைப்பழுக்களையும் புறப்பொருட்தேவைகளின் வருத்தல்களையும் வாழ்வின் நெருக்கல்களையும் குடும்பப் பொறுப்புக்களையும் பொருட்படுத்தாது வருமானம் கடந்த இனமான உணர்வோடு எமது இலக்குகளை இனங்கண்டு எம்மோடு இதுவரை பயணித்து வரும் இவர்களுக்கு நன்றி சொல்லும் வகையறியேன்!

மேலும் தமிழவை சார்ந்த எனது கலை கவிதைப்பணிகட்கு அப்பாலும் எனது கட்டட தலைமைத்துவ முகாமைத்துவ நிர்வாகப் பயிற்சிப் பட்டறை சார் ஆளமைகளை ஆற்றல்களை இனங்கண்டு என்னைத் தமது சமுதாய சேவைகளுக்குள் இணைத்த பெருமக்களையும் யான் புறக்கணிப்பதற்கில்லை!

தமிழவையின் விரிவான நோக்குகளையும் அதன் போக்கினையும் விரித்துரைக்க எமக்கெனப் பல தளங்களைத் தற்போது உருவாக்கி வருகின்றனர் எமது தம்பி தங்கையர்கள்! குறிப்பிடத்தக்கது! இதுபற்றிய விபரங்களை விழாவின்போது அறியத்தரவுள்ளோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழவைக்கான சொந்த மின்வலயத்தளம் ஒன்று கடந்த சில மாதங்களாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது! இதுபற்றிய விபரங்களை விழாவின்போது அறியத்தரவுள்ளோம்!

எனினும் தமிழவையின் இலக்குகளில் முக்கியமான சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுவது அவசியமென எண்ணுகின்றேன்!

* செம்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பினையும் இப்பெருமொழி காட்டும் வாழ்வியலுக்கான வழிகாட்டல்களையும், எமது முன்னோர்களின் ஆற்றல்கள், ஆளுமைகளையும், மற்றும் தமிழர் வாழ்வின் விழுமியங்களையும், நமது இளைய சந்ததியினருக்கும் நாளைய சந்தியினருக்கும் மொழி கலை கவிதை இலக்கியம் பண்பாடு வரலாறு சார் படைப்பாக்கச் சக்தி மூலம் கையளித்தல்.

* இளைய சந்தியினரின் கலை.. இலக்கிய... இயற்றமிழ்ப் படைப்பாக்க ஆளுமைகளையும் ஆய்வுத் தேடல்களையும் முகாமைத்துவ.. தலைமைத்துவ ஆற்றல்களையும் ஊக்குவித்து அவற்றிற்கான பயிற்சிப்பட்டறைகளை நடாத்தி... இவற்றின் வழி பூகோளப் பரப்பின் பல்லினக்கலாச்சாரப் பின்னலில் தமிழினத்தின் மொழி கலை பண்பாட்டு வரலாற்று அடையாளத்தினைத் தக்கவைத்தல்.

* 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' என்ற கணியன் பூங்கன்றனின் வரிகளுக்கியைய எல்லா மக்களும் எம்முறவுகளே என்ற மானிடத்தின் பண்புணர்வையும் 'அன்பே தமிழ்! அதிலே அமிழ்!' என்ற பரந்த அன்புணர்வையும் எமது இளைய சந்ததியின் இதயங்களில் விருத்தி செய்து உலக இனங்களையும் பல்லினக் கலாச்சாரங்களையும் அரவணைத்து அன்போடொழுகல்.

* தாயக நிலங்களில் பசி பட்டினியாலும் உணவு உடை உறையுள் சார் குறைபாடுகளினாலும் கல்வி மேம்பாட்டு வளங்களின் வரட்சிகளினாலும் வாடும் பாலர்கள் சிறுவர்களின் இன்னல்கள் இடர்களினைப் போக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை இனங்கண்டு அவரோடு இணைந்து பணியாற்றுதல்.

* 'அறிவு உணர்வு அனுபவம் அதிர்வு' எனும் நான்கு படிகளுக்கான கல்விக் கொள்கைளை ஆதரித்து அவற்றை ஊக்குவித்தல்.

* வள்ளுவனையும் வள்ளுவத்தையும் உலக அரங்கில் நிலைநிறுத்துதல்.

* தமிழை உலகப் பல்கலைக் கழக இருக்கைகளில் அமர்த்துவதற்காக இன்று முன்னெடுக்கப்படும் முயற்சிகளை இனங்கண்டு அவற்றிற்கு உறுதுணையாக நிற்றல்.

மேலே கூறப்பட்டுள்ள இலக்குகளோடு தமிழவை கலை கவிதை இலக்கிய முயற்சிகளில் எமது இளைய சந்தியினரையும் அவர்தம் பெற்றோர்களையும் தமிழ்ப் பாடசாலைகள் கலைக்கூடங்களையும் இணைப்பதில் மிகவும் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் இயங்கி வருகினறதென்பதனையும் ஈண்டு பதிவு செய்ய விழைகின்றேன்!

இம்முயற்சிகளில் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியினையும் வளங்களையும் பயன்படுத்துவதில் எமது தமிழவை முன்னிற்கும் என்பதனையும் உறுதி செய்ய விரும்புகின்றேன்! இதற்கான புறப்பொருள் வளங்களை வழங்கவல்ல வள்ளல்களையும் வர்த்தகர்களையும் ஊடக நிறுவனங்களையும் தமிழவை வரவேற்கத் தயாராகவுள்ளது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக தமிழவையின் தொடர்ச்சியான முன்னேற்றத்திலும் தடைகளை வெல்லும் முயற்சிகளிலும் எம்மோடு துணைநின்று தோள்கொடுக்கின்ற அனைத்து அன்புள்ளங்களையும் ஆரத்தழுவியவாறு.. இவ்விழாவிற்கான நிகழ்ச்சித் தயாரிப்புக்களிலும் நிதி நிர்வாக நிலைப்பாடுகளிலும் மற்றும் ஊடக விளம்பர நடவடிக்கைகளிலும் மண்டப விருந்தோம்பல் விடயங்களிலும் எமக்குத் தமது பேருதவியை வழங்குகின்ற…மற்றும் இம்மலருக்கான வாழ்த்துச் செய்திகளின் மூலம் எமக்கு உற்சாகமும் உந்துசக்தியும் அளிக்கின்ற ஆதரவாளர்களுக்கும் அன்பாளர்களுக்கும் பண்பாளர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைக் கூறி எனது வரிகளை நிறைவு செய்கின்றேன்!

திங்களும் கதிரும் தென்றலும் தீயும்
பொங்கு கடலும் பூமியும் உளவரை
எங்கள் தமிழும் இனமும் வாழும்
என்றே நம்பி எம்பணி செய்வோம்!

'சத்தியம் சாகாது - அது
தீயிலும் வேகாது!
நித்திய மாயிருக்கும்! - உயர்
நீதியின் வழிநடக்கும்'

'எண்ணிய எண்ணியாங்கெய்துவர் எண்ணியர்
திண்ணியராகப் பெறின்'- வள்ளுவன்

'உளத்தினிலே ஒளியுண்டானால் வாக்கினிலும் ஒளியுண்டாகும்'- பாரதி

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!'- கணியன் பூங்கன்றன்

'அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின் அன்பேசிவமாய் அறிந்திருந்தாரே'- திருமூலர்

'அன்பே தமிழ்! அதிலே அமிழ்!' – தமிழவை

அன்புடன்
**புலவர் நல்வதம்பி சிவநாதன்**
காப்பாளர்
இலண்டன் தமிழவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

***"ஆன்றோர் அறிவும் சான்றோர் சால்பும்***
***தோன்றாத் துணையாக் கொண்ட தமிழவையின் சார்பில்"***



உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

புலம்பெயர் நாட்டில் வாழ்கின்ற எம் சகோதரரின் தமிழ்ப் பற்றையும், அவர்தம் சிறார்களின் எதிர்கால சிந்தனையையும் மையப்பொருளாக வைத்து இத்தமிழவை உருவாக்கப்பட்டது. எமக்கென்று ஓர் நாடு இல்லாத நிலையில் புலம்பெயர் நாட்டில் எமது விழுமியங்களைப் பாதுகாக்க லண்டனில் தமிழவை எடுத்துவரும் பங்கு அளப்பரியது.

காலத்திற்கேற்ற வகையில் பெற்றோரையும் கலைஞர்களையும் உள்வாங்கி, அவர்களின் திறமைக்கேற்ப கருத்தாளம் மிக்கதும், நகைச்சுவை கலந்ததுமான பல நாடகங்களை அள்ளி வழங்கியுள்ளது. அதுமட்டுமன்றி பல பட்டிமன்றங்களை, கவியரங்கங்களை அவர்களூடாக எமக்களித்துள்ளது.

பாவும் நாவும் போன்ற கலந்துரையாடல்களை தயாரித்து எமது சுயமாக நினைத்துப்பேசும் ஆற்றலை, மேடைப்பேச்சாற்றலை எம்மவர்களை கவரும் வண்ணம் சிறப்பாக நடாத்தியுள்றது. தமிழ்ச்சிறார்களுக்கான பல பயிற்சிப்பட்டறைகளை நடாத்தி தமிழ்ச்சிறார்களின் ஆளுமைமிக்க உளவளத்திற்கு மெருகூட்டி வருகின்றது. வளர்ந்து வரும் மற்றும் அனுபவமிக்க நடன ஆசிரியைகளுக்கு நாட்டிய நாடகங்கள் பலவற்றை தயாரித்தளித்து அவர்களது கலையுணர்ச்சியை வெளிக்கொணர வைத்துள்ளது. லண்டனிலுள்ள பல தமிழ்ப்பாடசாலைகளை இணைத்து சிறந்த முறையில் அவர்கள் தம் பேச்சாற்றலை, நடிப்புத்திறனை வளம்படுத்தி வருகின்றது. இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழையும் கலந்தெடுத்து தித்திக்கும் சாறெடுத்து எமக்கு திகட்டத் திகட்ட அள்ளித்தருகிறது எங்கள் தமிழவை. இவை அனைத்துக்கும் முதுகெலும்பாக இருந்து எம்மையெல்லாம் தன் பாசக்கரங்களால் அணைத்தெடுத்து உரிமையுடன் அன்பு பாராட்டி நடாத்தி வரும் அன்பு அண்ணன் திரு புலவர் சிவநாதன் என்றென்றும் பாராட்டுக்குரியவர்.

இன்னும் பல அரிய திட்டங்களை தன்னகத்தே கொண்டு தமிழவை எதிர்காலத்தில் பல இளைய தலைமுறையின் பங்களிப்போடு செயற்பட உள்ளது என்பதை இங்கு கூறி வைக்க விரும்புகின்றேன்.

இச்சங்கத்தை விரிவுபடுத்தி, நிரந்தர அங்கத்தவர்களை தன்னகத்தே இணைத்து, இளைஞர்களை முன்னிலைப்படுத்தி அவர்களின் கரங்களில் தலைமைப்பொறுப்பை அளித்து நாம் பின்னிருந்து அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டியது காலத்தின் கடமையாகும். இன்றைய கணணி யுகத்தில் அவற்றிற்கு ஈடுகொடுக்கக்கூடியவர்கள் இளைஞர்களே.

எனவே இளைஞர்களே! வாருங்கள். அன்பு அண்ணன் புலவர் சிவநாதனின் கரங்களைப் பலப்படுத்தி தமிழவையை வேகமாக இன்னும் சிறப்பாகக் கொண்டு செல்வோம். இதுகாலவரை எமக்கு ஆதரவளித்த கலைஞர்களுக்கும் வர்த்தகப்பெருமக்களுக்கும் அன்பர்களுக்ம் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தொடர்ந்தும் உங்கள் மேலான பங்களிப்பையும் ஆதரவையும் எதிர்பார்த்துளளோம்.

நன்றி வணக்கம்.

அன்புடன்
**கவிஞர் பாலரவி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்றோர் அறிவும் சான்றோர் சால்பும் தோன்றாத் துணையாய்க் கொண்ட அவையே தமிழவை

**சூ.யோ. பற்றிமாகரன்**

தமிழ்ஞானசம்பந்தன் எனத் தம்மைத் தமிழுடன் பிணைத்து அழைத்த அருளாளர் திருஞானசம்பந்தர் தந்திட்ட அருள்மொழி தமிழவை என்னும் திருமொழியைத் தனது பெயராகப் பெற்றிட்ட 'தமிழவை' குறித்த எனது சிந்தனைகளே இவ்வெழுத்துப்பரவல்

***பண்ணும்பதம் ஏழும்பல ஓசைத்தமிழ் அவையும்***
***உள்நின்றதொர் சுவையும் உறு தாளத்து ஒலி பலவும்***
***மண்ணும்புனல் உயிரும்வரு காற்றும்சுடர் மூன்றும்***
***விண்ணும்முழுது ஆனான்இடம் வீழிம்மிழலையே.***

'ஊழின்மலி வினை போக்க வைக்கும்' திருவீழிமிழலை இரண்டாம் திருப்பதிகத்தில், சுந்தரகுஜாம்பிகை உடனுறை வீழிய நாதர் மேல் அமைந்த 'தக்கராக' 4வது திருக்கடைக்காப்பில் இந்தத் தமிழவை என்ற அருள்மொழியினை அவர் பாடிச்செல்வதைக் காண்கின்றோம். இங்கு பண் என்னும் இசையும் பதம் என்னும் நாட்டியமும் ஓசைத்தமிழ் என்னும் இயலும் தம்மகத்தே கொண்டோரின் அவை தமிழவை என்கிற அற்புதமான விளக்கத்தை, "எனதுரை தனதுரையாக" இறைவன் அருளினான் எனக் கூறித் தமிழைத் தெய்வமொழியாக்கிய திருஞானசம்பந்த சுவாமிகள் அருளுகின்றார். அந்த வகையில் இசைத்தமிழும் நாடகத்தமிழும் இயற்றமிழும் தாரணியில் தழைத்தோங்குவதற்கு உழைத்து மரணத்தை வென்ற பெரியார்களாகிய ஆன்றோர்களின் அறிவையும் உழைக்கின்ற சான்றோர் சால்பையும் தோன்றாததுணையாகக் கொண்டவர்கள் அவையாகத் தமிழவை உலகத்தின் கலாச்சாரத் தலைநகராம் இலண்டனில் இருந்து உலகெங்கும் உள்ள தமிழர்க்கும் மானிடர்க்கும் தம்மால் இயன்ற பணி செய்யவென அவன் தாள் பணிந்து, 1999ல் மில்லேனியம் ஆண்டை எதிர்கொண்டு தொடங்கப்பெற்றுப் பதினென் பருவமங்கையாக இன்று 2017ல் கூர்ப்படைந்து நிற்கிறது. இவ்விடத்தில் சால்பு என்பது அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை என்னும் ஐந்துயர் பண்புகளைத் தம் வாழ்வின் தூண்களாகக் கொண்டு வாழ்ந்த – வாழ்கின்ற சான்றோர்களைக் குறிக்கிறது என்கையில் இவையே தமிழவை உறுப்பினர்களின் உறுப்புரிமைத் தகுதியாக வளர்க்கப்பட வேண்டும் என்பது கூறாமலே விளங்குகின்ற ஒன்றாகத் திகழ்கிறது என்பதனை நினைவுறுத்த வேண்டியுள்ளது. மேலும் சால்பு விழுமியங்களின் பண்பாக அமைகையில் சால்புடையவர் என்பதை எவ்வாறு கண்டறிவது என்பதற்கும் வள்ளுவர் நல்லதோர் வரைவினைச் செய்து சென்றுள்ளார்.

"சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி - துலையல்லார் கண்ணுங் கொளல்",

என்பது அந்த சால்பு என்பதனைக் கண்டறிதற்கான வரைவிலக்கணம். அமைதியான உள்ளம் அதுதான் சால்பு. அந்த அமைதியான உள்ளம் என்றால் என்ன? எமக்குச் சமானமானவர்களாக இல்லாதவர்கள் வழியாகத் தோல்வி ஏற்படுகின்ற நேரங்களிலும் அதனை ஏற்கும் மனநிலை. இந்த நிலை வந்துவிட்டால் மனங்கொந்தளியாது உடல் பதறாது செயலில் உறுதி இருக்கும். ஊழி பெயரினும் தாம் பெயராராகச் சான்றாண்மைக்கு ஆழி என உலகம் போற்ற உறுதியுடன் எந்தச் சூழ்நிலையையும் வெற்றியாக மாற்றுகின்ற தன்மை தானாகவே வளரும். பாரதியின் குயில் மொழியில் " உறுதி, உறுதி, உறுதி – உறுதிக்கேயோர் உடை உண்டாயின் -இறுதி, இறுதி, இறுதி. எனப்பாடப்படும் உறுதியான உள்ளத்தை, நாடிழந்து, வாழ்விழந்து, வாழவைத்த விழுமியங்கள் தானும் இழந்து, புலம் எங்கும் அதாவது திசையெதுவென்று தெரியாது வாழ்ந்தறியா இடமெல்லாம் வாழ்வு வெடித்துச் சிதறிய புலம்பெயர் மக்களிடை ஏற்படுத்த வல்லவைகள் இரண்டே இரண்டு மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று இறைநம்பிக்கை மற்றது தாய்தந்த தாய்மொழி வழி உள்ளத்தே நிலைத்த சிந்தனைகள். நாம் தமிழர்கள் என்ற வகையில் தமிழ்மொழியே இதனை எமக்களிக்கும் ஆற்றல் உள்ளதாகிறது. த் + அமிழ் ழ்ரீ தமிழ் என்பவர்கள் இதன் விளக்கமாக த் என்ற உயிர்களிலும் தியத் என பாசப் பொருட்களிலும் தோன்றாத் துணையாக உள் இருந்து அவற்றைத் தோற்றுவித்து நிலைப்படுத்தி ஒடுக்கி இயக்குகின்ற அந்த ‘அது’ வின் பேராற்றலால் ஞானத்தால் உயிர்களாகிய த் இல் அமிழ்ந்து தமிழ் வாழ்வான அனைத்து உயிர்களையும் உலகையும் வாழவைத்து வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தில் வைக்கப்படும் பயிற்சியினை உலகுக்குத் தருமொழியே தமிழ் என்பர். இதனாலேயே தமிழ் தெய்வமொழி எனப்படுகிறது. தமிழ்த்தாய் வாழ்வளிக்கும் தெய்வமாகவே கொண்டாடப்படுகின்றாள். இந்த உண்மைகளை அறிதற்கு இந்த உண்மைகளின் வழி எழுதற்கு முத்தமிழறிவும் முத்தமிழ்ப் பயிற்சியும் முத்தமிழ் வாழ்வும் ஒவ்வொரு தமிழனுக்கும் அவசியமாகின்றது. இதனைச் செய்வதற்கான இயற்றமிழ் அறிவையும் கலைத்துவப் பலத்தையும் கற்றிடக் கேட்டிட அமைக்கப்பட்ட தமிழர்க்கான அன்பவை அறிவவை அறிவியல் தரு அவை தன்னையே தானுணர்ந்து தலைவனை உணரும் தமிழர் மெய்யியல் வழி வாழ அழைக்கும் அவையே தமிழவை. இவற்றை எல்லாம் தமிழர்க்கு அளித்திடும் ‘தமிழவை’ ஒன்று குறித்து முதுதமிழ்ப்புலவர் வித்திலே விளைந்த நல்லதம்பி சிவநாதன் என்னும் இளம் புலவன் ஒருவன் 1974இலே நல்லாக்கக் கனவு கண்டான். 1999 இலே அந்த நல்லாக்கக் கனவின் வெள்ளிவிழா அன்பளிப்பாக இலண்டனில் செயலாக்கங்கள் செய்திடப் பிறந்தது மகாகவி ந. சிவநாதன் அவர்களின் “தமிழவை”. இவ் அவை ஒத்த கருத்துடையோரைத் தேடலும் அவர்களோடு எந்நாளும் கூடலும் அந்தக் கூடல் தரு பலத்துடன் இரண்டாவது புத்தாயிரம் ஆண்டினிலே உலகத் தமிழர்களை எல்லாம் ‘தமிழராக’ வாழவைக்க ஓடலும் என்னும் முப்பரிமாணப் பணிகளைச் செய்து நிற்கிறது. தமிழராக வாழ்வதற்கான தேடல் வெற்றி பெற தமிழினை வாழ்நாள் எல்லாம் கற்கும் உள்ளம் வேண்டும். இந்தக் கற்றல் என்பது படித்தல் அல்ல தமிழுடன் பழகல் தமிழருடன் உறவாடல் தமிழ் வாழ்வாக வாழ்வை வெளிப்படுத்தல் என்பதாகிறது. கூடல் என்பது இரண்டல்ல என்ற நிலையில் தமிழர்கள் ஒன்றாகும் சக்தியினைப் பெறவல்லனவற்றை முத்தமிழ்ப் படைப்புக்களும் தரு தமிழ்வாழ்வின் ஓசைகளைக் கேட்கவேண்டும். “கற்றல் கேட்டல் உடையார் பெரியார்” என்பது திருஞானசம்பந்தரின் இரண்டாவது தேவாரம் தரு விளக்கமாகிறது. எனவே எவர்க்கு வாழ்நாள் எல்லாம் கற்கும் உள்ளமும் கேட்கும் விருப்பும் உள்ளதோ அவரே பெரியார் என்னும் சொல்லாட்சிக்கு உரியவர். ஐந்தறிவு உடனே உணர்ந்தறிவாகிய பகுத்தறிவு என்னும் ஆறறிவு கொண்டு மாந்தும் தன்மை பெற்று மனிதனாகி, ஆன்றோர் உபதேச அறிவைத் தமது ஏழாம் அறிவாகக் கொண்டு தெளிவுபெற்று. சான்றோர் படைப்புக்களைத் தானே நூல்வழி கற்றறியும் எட்டாவது அறிவையும் பெருக்கி, கல்வி கேள்விகளில் சிறந்தவர்களோடு கலந்துரையாடிப் பெறும் ஒன்பதாம் அறிவாகிய பட்டறிவில் உயர்ந்து, இமைப்பொழுதும் நெஞ்சினை நீங்காப் பரம்பொருளைப் பற்றிப் பிடித்துச் சிறுகணப்பொழுதும் அதனை விட்டுப் பிரியாச் சச்சிதானந்தப் பெருநிலையினை உயிருடன் இவ்வுலகில் வாழ்கின்ற பொழுதே உணர்ந்தனுபவிக்கின்ற தன்னைத்தானே அறியும் மெய்யறிவைப் பத்தாவது அறிவாகப் பெற்று உயிரை உய்யவைப்பதே தமிழ் அறிவு. இந்தத் தமிழறிவை இரண்டாவது மில்லேனியத் தமிழர்களின் இன்பவாழ்வுக்கான வழியாக முன் எடுப்பதே தமிழவையின் நோக்கு. இதற்கு முதலில் பல்லின பன்மொழிக் கலாச்சாரச் சூழலில், தமிழினம் தனது அடையாளங்களுடனும் அதற்கான உலக ஏற்புடைமையுடனும் தனித்துவமான இனமாகத் தன்மான இனமான உணர்வுடன் வாழமுடியும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவிக்க வேண்டும். உலகில் மக்களாட்சித் தத்துவம் முதன்முதலில் அரசியல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐக்கிய இராச்சியத்தில் தமிழர் உன்னதங்களையும் உயர்வுகளையும் தமிழதன் விழுமியங்களையும் எந்நாளும் எடுத்துரைக்கவும் ஆற்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள தமிழர்களை உருவாக்குவதற்காகத் தமிழ்மொழி, கலை கவிதைகள், பண்பாட்டுத் தொன்மிய கிராமிய ஊர்மிய மரபுகளைப் புதிய வீச்சுடனும் மக்களுக்குச் சக்திதரக்கூடிய புதிய பரிமாணங்களுடனும் நவீன யுக்திகளுடன் மீட்டுப்பாதுகாத்து நாளைய சந்ததிக்குக் கையளிக்கும் பணி செய்வதற்கான பல்விருட்சமாகத் தமிழவையை இறையருளாலும் பொருள்வளத்தாலும் அறிவியல் பலத்தாலும் நாம் வளர்த்தெடுக்க வேண்டும். இதற்கான நான்கு போக்குகளைத் தமிழவை கடந்த பதினெட்டு ஆண்டுகளாக தன்னால் இயன்றளவு செய்து வருகிறது. முதலாவது, தமிழ்மொழியினதும், தமிழினத்தினதும், தேச, தேசிய, தெய்வநிலைப்பட்ட, தொன்மை நிறை வரலாற்றையும், இவ்வரலாறு இவ்வுலகிற்கு வழங்கிய மொழி, கலை, பண்பாடு, வாழ்வியல் விழுமியங்களையும், உலகப்பரப்பில் வாழும் இன்றைய தமிழ்ச் சந்ததிக்கு மட்டுமின்றி வாழ்ப்போகின்ற நாளைய சந்ததிகளுக்கும் வழங்கிடப் பன்முக முயற்சிகளை எடுத்தல். இரண்டாவதாக உலக ஆய்வாளர்களின் பௌதிக ஆய்வுப் பரிமானங்களுட் சிக்காத, தொல்குடி வரலாற்றுத் தேடல்களை ஊக்குவித்து, நிலத்தடியிலும், கடலின் ஆழத்திலும் அமிழ்ந்து கிடக்கும் ஆதிநாகரிகத் தொடர்ச்சிகளையும் ஊடு தொடர்பு களையும் வெளிக்கொணர்தல். மூன்றாவதாக எமது முன்னோரின் முகாமைத்துவவ, தலைமைத்துவ ஆற்றல்களை அனுபவங்களை, இனங்கண்டு, அவற்றின் பழங்களை உள்வாங்கி, அவற்றினை நவீன நிர்வாக, முகாமைத்து, தலைமைத்துவத் தத்துவங்களுடன் இணைத்து, தனிமனித, சமுதாய மேம்பாட்டுக்கான பயிற்சிப் பட்டறைகளை நடாத்தித் தமிழர்களின் பொருளாதார சமுக அரசியல் ஆன்மிக நாளாந்த வாழ்வுக்கு அவற்றால் பயன்பெறச் செய்தல். மனிதநேயத்தை வளர்க்கவும், மானிடத்தைப் போற்றச் செய்யவும், தமிழர்களின் தனித்துவ வாழ்வின் மாட்சி இதுவென்று உலகை உணரவைக்கவும் வையப்பொதுமறையாம் திருக்குறளையும் தெய்வப் பெரும்புலவ னாம் வள்ளுவப் பெருந்தகையையும் உலகப் பார்வையில் உச்சப்படிக்கு உயர்த்துதல். இந்த நான்கு நோக்கு களுடன் தாயத்தில் வாழ்விழந்து வாழும் வகைதெரியாது வறுமையும் தனிமையும் பாழ்படுத்தலும் தமது வாழ்வாக வாடும் இளம் தமிழ்ச்சமுதாயத்தினர்க்கும் இங்குள்ள எமது இளைய சந்ததியினர்க்கும் இடை இறுக்கமான அன்பும் பாசமும் வளர்த்திட இளையவர்களைக் கொண்டே இளையவர்களுக்கு உதவும் செப்புக காசு திட்டம் போன்ற பல திட்டங்களையும், எங்கள் தாயகத் தாய்மார்களுக்கும் சகோதரிகளுக்கும் சிறுவர் களுக்கும், உடல் வலுவிழந்தும் வாழும் வலிமையிழக்காத எம் உடன் பிறவிகளுக்கும் உதவ எம்மால் இயன்ற முயற்சிகளையும், செய்வதுடன் தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற எம் தாயக மக்களின் பிறப்புரிமைகளை அவர்கள் ஜனநாயக வழிகளில் அடைவதற்கு எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருப்பதும் தமிழவையின் வரலாற்றுக் கடமையாகவுள்ளது. இப்பணிகள் நிறைவாவதற்கு உங்கள் என்றும் மாறா அன்பும், உங்கள் அவை தமிழவை என்ற உரிமையுடனான உங்கள் மதியும் நிதியும் எல்லாம் வல்ல இறைவனின் அருளும் எந்நாளும் தொடர அவனருளாலே அவன் தாள் பணிகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MEDICAL INSTITUTE OF TAMILS
## SOUTH THAMES REGION
(UK Registered Charity No: 1066924)

**Chairman**

Dr J Sharavanan

**Secretary**

Dr.S Rajaratnam

**Treasurer**

Dr N Puvi

**Committee Members**

Dr F Balaratnam

Dr B Baskaran

Dr M Chandrakumar

Dr K Gnaanachelvan

Dr S Jeyanathan

Dr S Krishnapalasuriar

Dr.I Kumarendran

Dr V.Karunaharan

Dr A Mahendrarajah

Dr N Navaratnarajah

Dr S Sivathasan

Dr V Vijeyakulasingham

### Message from Chairman of the MIOT - STR

It is my greatest pleasure to send this message on the occasion of the 18th anniversary of the London Thamizhavai, celebrated with this Muthamilaaram 2017 Event.

I can recollect the London Thamizhavai has a long and close association with the MIOT-STR, both in our cultural and fundraising activities. The London Thamizhavai has always enthusiastically and willingly presented their Linguistic, Poetic, Dramatic and Cultural related performances at our cultural platforms. It is clear to see that a huge investment of time, effort, resources and talent is made into creating these pieces of Art by a multitude of members of the London Thamizhavai. This is all the more creditable when it is observed that these high quality performances are given voluntarily towards the charitable goals of the MIOT – STR.

I take this opportunity on behalf of the MIOT – STR to extend our heartfelt gratitude for their efforts, and our congratulations on their achievements.

We look forward to maintaining our relationship for many years to come, and eagerly await the next performance from your team.

**Dr Sharavanan Jeyanathan**
**Chairman MIOT - STR**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION

## LONDON - UK



M Ramathas
5th Dan
Isshin-Ryu Karate - Do

## SENSEI M. RAMATHAS

TRAINED BY MICHAEL CALANDRA

THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF

## ISSHINRYU WORLD KARATE ASSOCIATION

OKINAWA - JAPAN




**NEW BRANCH OPENING 16th MARCH 2016**
**at CATERHAM HIGH SCHOOL, CLAY HALL IG5 0QW**
**Wednesdays 5.00pm to 7.00pm**

**Other Branches:** Gants Hill • East Ham • Catford • Ley Street
Chadwell Heath • Sutton • Ilford Lane • Milton Keynes

**Telephone: 07958 010 139**

**Email: goshinisshinryukarate@gmail.com • www.goshinisshinryukarate.com**



M Ramathas
5th Dan
Isshin-Ryu Karate - Do

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JR Print
www.jrprint.com

61, Hoe Street, London E17 4QR
T : 020 8503 6643
F : 020 8521 3967
M : 07939 998 730
E-mail : ravi@jrprint.com
Web : www.jrprint.com

*25 Years Experience In the Printing World*




- Arangetram Books
- Cake Boxes
- Bill Books, Invoices
- Leaflets
- Rich Cakes & Boxes
- Raffle Tickets
- High Speed Copier
- Rubber Stamps
- Lamination
- Translation Services
- Birthday Cards
- Letter Heads
- Wedding Cards
- Short Eat Boxes
- Photocopying
- Compliment Slips
- Short eat Bags
- Gold Blocking
- Visiting Cards
- Colour Printing
- Invitation Cards
- Souvenirs & Invoices
- Fast, Relaible & Friendly Service

**Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost.**

**Call For Free Quotation**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Children's Hunger Relief Fund UK

CHRF UK

24/10/2017

106 Parkside Drive
Watford
WD17 3BB

TESTIMONIAL

Thamizhavai have been a tremendous partner to work with. Their commitment and contribution to CHRF-UK has been consistent and has made a real impact to our cause. In March 2016, they organized a variety show at Winston Churchill Hall, with different acts to raise funds for CHRF-UK. The funds that were raised were used to aid disabled victims in Sri-Lanka. The acts they organized included a musical programme by the children, a debate headed by Mr. Fatimaharan, a play, Perakkunchukal, written and directed by Pulavar Sivanathan and Pirapancha Leelai, a dance drama written by Pulavar Sivanathan, choreographed by Pathmini Gunaseelan and performed by London Narthana Kalalalayam students. They all worked very hard, to produce a quality show. All acts were very well received.

Due to the popularity of the show, we had more people attend than we could seat. All enjoyed the outstanding performances and the presentation given by CHRF-UK. They have been a pleasure to work with as they have always communicated directly and accurately, without delay. It was one of the most successful programs and they raised over £8,000.00, in addition to donations from many individuals.

We had the opportunity to go to Sri Lanka in April 2016 and August 2016 to visit over 100 disabled people. These included amputees and people who were paralysed below the neck and waist. During this visit, we found that the majority of the disabled people were living without basic needs such as crutches, beds, toilets, wheelchairs and water. One of the other main problems for the disabled was travelling, due to living in rural areas, far away from the main roads. They had no access to public transport either.

Thamizhavai's contribution allowed us to help with livelihood projects, as well as to buy specially adapted vehicles to enable our benefactors to travel and earn for themselves.

We provided 3-wheel motor bikes for amputees and paraplegics at a cost of £1250.00 per bike, safari motorbikes at a cost of £750.00 and livelihood projects mainly shops. We also provided fishing boats for amputees at a cost of between £500.00 - £750.00. We also provided crutches, beds, temporary commodes in addition to providing bicycles for 35 children at a cost of £79.00 per bicycle (17 children whose parents are paralysed and 18 children living below poverty line).

Our major project since 2016 has been constructing wells for the disabled people. Between 2016-2017 we have constructed over 90 wells (new and old) for the visually handicapped and disabled people. Since 2012 we have constructed/refurbished over 750 wells in Vanni and the families are doing cultivation very successfully. CHRF-UK has done numerous projects over the years including helping University students. Last year we helped 78 students and this year we are helping 58 students.

Our sincere thanks go to Mr. Pulavar Sivanathan, founder of Thamizhavai and his team, for organizing such a wonderful programmed and for helping us to help the disabled people in Sri lanka.

Please visit our website for further information or contact us. www.chrf-uk.org

Dr.M. Kaneshanathan - Chairman CHRF-UK

**106 Parkside Drive, Watford, WD17 3BB, Hertfordshire UK**
**Tel: +44 1923 236419, Mobile: +44 7737 033 978**
**Registered charity No: 1138753**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Programme

- Thamizhavai Keetham
- Salutation
- Lighting of the Traditional Lamp
- Orchestra

  *Students of Mrs. Thushianthy Thiyagarajah, Mrs. Sukirthakala Kadatcham and Mr. Kirupakaran*
- Welcome Speech by Mr. Bala Ravindran
- Natiyanjali

  *Students of Mrs. Shantha Annapoorani - Shri Meenatchi Natiya Palli*
- Speech 1

  *Student of Waltham Forest Thamil School*
- Youth Debate

  *Students of Aruna Uthayam School*
- Speech 2

  *Student of Thaninayakam Tamil School*
- Solo Dance Performance by Mrs. Ragupriya Senthilkumaran
- Oratory Tamil

  *Students of Thaninayakam Tamil School and Waltham Forest Thamil School*
- Learned Scholarly's Debate

  *Led by Mr. S.J. Fatimaharan*
- Dance Drama: "Kalaimakal Kaviyarul"

  *Students of Mrs. Pathmini Gunaseelan - Narthana Kalalaya School*

### - Interval -

- Comedy Drama

  *Students of Tamil Kalvi Kalai Panpaddu Kalakam (Southend)*
- Speech - Mr. Pulavar Sivanathan
- Kavignar Kuralarangam: "Can we forget our ancestors?"

  *Led by Mr. Pulavar Sivanathan*
- Drama: "Deed"
- Wishes & Presentation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சி நிரல்

- தமிழவை கீதம்
- அக வணக்கம்
- மங்கள விளக்கேற்றல்
- பல்லிசை வாத்திய இசை

  *இசைக்கலைஞர்கள் திருமதி துசியந்தி தியாகராஜா. திருமதி சுகிர்தகலா கடாட்சம். திரு. கிருபாகரன் ஆகியோரின் மாணவ மாணவியர் வழங்கும் இசை*
- வரவேற்புரை - திரு பால ரவீந்திரன்
- நாட்டியாஞ்சலி

  *திருமதி சாந்தா அன்னபூரணி அவர்களின் ஸ்ரீ மீனாட்சி நாட்டிய பள்ளி மாணவமணிகள் வழங்கும் நடனம்*
- இளையோர் உரை 1
- "புலம்பெயர் நாட்டில் தமிழ் கற்றலும் வாழ்க்கையும் சுகமானதா? சுமையானதா?"

  *அருண உதயம் தமிழ்ப் பாடசாலை மாணவ மாணவியர் வழங்கும் பட்டிமன்றம்*
- இளையோர் உரை 2
- தனிநாட்டிய விருந்து

  *திருமதி ரகுப்பிரியா செந்தில்குமரன் அவர்கள்*
- சொற்றமிழ்

  *தனிநாயகம் தமிழ்ப்பள்ளி மற்றும் வோல்தம்ஸ்ரோ தமிழ்ப்பாடசாலை மாணவமணிகள்*
- கற்றோர் கருத்தரங்கம்

  *திரு சூ. யோ. பற்றிமாகரன் தலைமையில் நடாத்தும் கருத்தரங்கம்*
- "கலைமகள் கவியருள்"

  *புலவர் சிவநாதன் அவர்களின் படைப்பாக்கத்தில் திருமதி பத்மினி குணசீலன் அவர்களின் நாட்டிய நெறியாள்கையில் இலண்டன் நர்த்தன கலாலயா மாணவியர் வழங்கும் நாட்டிய நாடகம்*

### - இடைவேளை -

- "கககபோ... கடுமலை கந்தசாமி கண்டுபிடிச்ச பொறி"

  *தமிழ்க் கல்வி கலை பண்பாட்டுக் கழகம் (சௌத்தெண்ட்) மாணவ மாணவியர் வழங்கும் நகைச்சுவை நாடகம்*
- உரை - திரு புலவர் சிவநாதன்
- "முன்னவரை மறப்பமோ?"

  *புலவர் சிவநாதன் தலைமையில் நாடாத்து கவிஞர் குரலரங்கம்*
- "உயில்"

  *புலவர் சிவநாதன் அவர்களின் எழுத்து நெறியாள்கையில் இலண்டன் தமிழவை கலைஞர்கள் வழங்கும் நாடகம்*
- வாழ்த்துக்களும் பரிசளிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



B. Vasantha Gurukkal BA (Hons)
சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்
கற்பகபதி ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
18 Chingford Road, Walthamstow, London, E17 4PJ
Home: 02085233802 |Temple: 02085273819 |
Mob: 07903707878 | Email: Vasanthan@live.co.uk



## வையகமெங்கும் வாழி வாழி!

நாடெல்லாம் நலமுறவே நம் தமிழ் செழிப்புறவே
வீடெல்லாம் வியன் தமிழ் விளங்கி மகிழவே
ஏடெல்லாம் எழில் மிகு தமிழ் மொழி எளிமையுறவே
தேடும் நம் தமிழவை தெவிட்டாத இன்பமாய் வாழி வாழி

புலம் பெயர் தேசமதில் நலம் பெறும் நம்தமிழ்
வலம் வந்து நிலை கொள்ள வகையான தமிழவை
தளம் என்றும் தனித்துவமாய் மின் நிலம் கண்டு
களம் கண்டு வளம் பெற்று வையகமெங்கும் வாழி வாழி

பொங்கும் எம் தமிழ் பொலிவுற்றுப் புகழ் சேர
தங்கும் குழுமமாம் தமிழவை தன்னிலே
மங்காத நம் தமிழ் மகிழ்வுடன் மலர்ந்து
எங்கும் ஏற்றமுற எல்லோரும் சேர்ந்திடுவோம்


சைவப்புலவர்
**பா. வசந்தக்குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Photos taken during Thamizhavai's journey




Thamizhavai meeting that took place in the 90s



Pulavar Sivanathan with Mr. Glenn, who has been supporting Thamizhavai since 1998

Thamizhavai's 15th Anniversary Celebration, Muththamizharam 2014









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Prapanchaleelai" Dance Drama that was performed in Chennai, 2014









Thamizhavai Annual Get Together, 2015







Villu Paatu Performance - International Conference on Classical Poetics and Celebration of Tamils' Life Style, 2016







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழின்பம் தந்திடும் தமிழவை.

தமிழவையின் 18ஆம் ஆண்டு விழாமலரில் ஓர் செய்தியை பகிர்ந்துகொள்ள கிடைத்தமையையிட்டு மகிழ்வடைகின்றேன். தமிழவை கடந்த 18 ஆண்டுகளில் பல்வேறு சிரமங்கள் - தடங்கல்கள் - தடைகளுக்கிடையிலும் தமிழ் உணர்வோடு-தமிழ்ப்பற்றோடு தன்சேவையை இங்கும் இலங்கையிலும் இந்தியாவிலும் வழங்கி வருவதை நாமனைவரும் நன்கறிவோம். இப்பணியில் புலவர் அவர்களுடன் அவரின் நெருங்கிய நண்பர்கள் சிலரும் இணைந்து சலிப்பின்றி ஆற்றிவரும் தமிழ்ப்பணி போற்றுதலுக்குரியது. இந்நிலையில் தமிழவை கடந்த சில ஆண்டுகளாக தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தும் நோக்கில் பல்வேறு தமிழ் அறிஞர்களையும் தமிழ் உணர்வாளர்களையும் தன்னுள் உள்வாங்கி எம் தமிழ் சமுதாயத்திற்கு பயனள்ள பல உதவிகளைச் செய்ய முனைவதையும் நம்மில் பலர் உணர்ந்துள்ளோம்.

தமிழவை முத்தமிழ் அறிவையும் நம் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லும் பணியில் கூடுதலான அக்கறையை பன்னெடுங்காலமாகக் கொண்டிருப்பது என்னை ஈர்த்த விடயமாகும். இங்கு வாழ்கின்ற நம் இளையோர் பலர் ஒரு குறிப்பிட்ட வயதின்பின். அதாவது தமிழ்பாடசாலையை விட்டு விலகி பல்கலைக்கழகம் செல்லும் பருவத்தில். தமிழில் பேசுவதையும் இயற்றமிழ் நிகழ்வுகளில் பங்குபற்றுவதையும் மிகவும் அரிதாகவே காணக்கூடியதாகவுள்ளது. இவர்களில் ஒருசிலர் தாம்கற்ற நுண்கலைகளில். அதுவும் பெரும்பாலும் பரதநாட்டியத்தை ஓர்சில காலம் தொடர்ந்தாலும். பெரும்பாலானோர் தமிழ் மொழியில் பேசுவதும் இயற்றமிழ் நிகழ்வுகளில் பங்குபற்றுவதும் இல்லையென்றே கூறலாம்.

இந்நிலையில் புலவரவர்கள் நீண்டகாலமாக தாளலய நாடகங்கள்- நாட்டுக்கூத்து- வில்லுப்பாட்டு போன்ற நம் கிராமியக்வ கலைகளை எம் இளையோர்களுக்கு பயிற்றுவிக்க பாடுபட்டு வருவது இங்கு சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். இவ்வாறு எம் இயற்றமிழை இளையோர் அனுபவித்து ஆடல் பாடலுடன் கிராமியக்கலைகளாக மகிழ்வுடன் கற்றிட வழியமைத்துக் கொடுத்த புலவரவர்களின் தொலைநோக்குப் பார்வையை நாம் பாராட்டியே ஆகவேண்டும். இன்று புலவரவர்கள் இன்னுமோர் படி முன்வந்து கவியரங்கம் - கருத்தரங்கம் - பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகளிற்கும் இவ் இளையோரை பயிற்றுவித்து தமிழவை நிகழ்வுகளில் களம் அமைத்துக் கொடுப்பது மிகவும் மகிழ்வைத் தருகின்றது. இது இலகுவான விடயமல்ல. இதற்கு பெரும்பாலான நேரத்தை இவ் இளையோருடன் செலவிட வேண்டியிருக்கும். இன்றைய விழா நிகழ்விலும் ஓர் பட்டிமன்ற நிகழ்வை இளையோரை வைத்து நிகழ்த்துவது பெருமைக்குரிய செயலாகும். இவ்வாறு எம் இளையோரை இயற்றமிழ் நிகழ்வுகளில் பங்குபெற பயிற்றுவித்து களம் அமைத்துக் கொடுக்கும் பணியில் தமிழவை வருங்காலங்களில் கூடுதலாகச் செயற்படவேண்டுமென்பது என் பணிவான வேண்டுகோளாகும். இந்தத் தமிழறிவை இரண்டாவது மில்லேனியத் தமிழர்களின் இன்பவாழ்வுக்கான வழியாக முன் எடுப்பதே தமிழவையின் நோக்கு. இதற்கு நாம் எம் இளையோர்க்கு எம் மொழியின் பெருமையை. அதன் அறம்சார் அறிவியல்சார் கருத்துக்களை. மெய்ஞான விஞ்ஞான விளக்கங்களை எளிய இலகு தமிழில் சிறு சிறு பாடப்புத்தகங்களாக அமைத்து. அதனை தமிழ்ப்பாடசாலைகளில் தமிழ் உயர் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகமாக்க வேண்டுமென்பது என் கருத்து. இதற்கு தமிழவை போன்ற ஓர் அமைப்பு தன் வளங்களைப் பயன்படுத்த வேண்டுமென்ற ஓர் அன்பான வேண்டுகோளை இங்கு பதிவிட விரும்புகின்றேன்.

பல்வேறு சிரமங்களுக்கிடையிலும்இ தமிழ் உணர்வோடு தளராது. கொள்கைப்பிடிப்புடன் தனிநடைபோட்டு தமிழின்பம் தந்திடும் தமிழவை. மென்மேலும் எம் தமிழ் சமுதாயத்திற்கு பயனள்ள உதவிகளைச் செய்திட எல்லாம்வல்ல அன்னை பராசக்தியின் அருள்வேண்டி. விழா சிறப்புடன் நடந்திட அன்னையவள் துணைவேண்டி விடைபெறுகின்றேன்.

நன்றி.


அன்புடன்

**வேந்தனார் இளஞ்சேய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WALTHAM FOREST TAMIL SANGAM

வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்கம்



## முத்தமிழாரம் சிறக்க எமது வாழ்த்தரிய வாழ்த்துக்கள்

லண்டன் தமிழவையின் முத்தமிழாரம் 2017 நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடைபெற வோல்தம் பொறஸ்ட் தமிழ்ப் பாடசாலையின் சார்பிலும், வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச்சங்கத்தின் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

எமது சொந்த மண்ணில் இருந்து போர்ச்சூழலினால் வேர் அறுந்து அன்னிய மண்ணில் கால் பதிக்கும்பொழுது எங்கள் தனித்துவத்தையும், புதிய சூழலில் எமது கலை, பண்பாடு, மொழி ஆகியவற்றைத் தக்க வைக்க வேண்டிய பொறுப்பும், அதனை எமது அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்ல வேண்டிய பொறுப்பும் எங்கள் மீது சுமத்தப்பட்டது.

அதனை நல்ல முறையில் எடுத்துச்செல்ல வேண்டிய வரலாற்றுக்கடமையில் நாம் இருக்கின்றோம். அதன் வெளிப்பாடே தமிழவை, தமிழ்ப்பாடசாலைகள் போன்ற செயற்பாடுகளாகும். இன்று தமிழவை லண்டனில் உள்ள பல பாடசாலைகளை இணைத்து இளைய தலைமுறையினரின் மொழி, கலைத்திறனை ஆகியவற்றை வெளிப்படுத்துதல் வரவேற்கப்பட வேண்டியவை.

புலவர் திரு சிவநாதன் அவர்கள் எமது தமிழ்ப்பாடசாலையுடன் இணைந்து பல நாடகங்களையும் பயிற்சிப்பட்டறைகளையும் வழங்கியுள்ளார். எமது தமிழ்ப்பாடசாலை நடன ஆசிரியை திருமதி பதிமினி குணசீலன் அவர்களுடன் இணைந்து பல நாட்டிய நாடகங்களையும அளித்துள்ளார். இன்றைய நிகழ்விலும் எமது பாடசாலை மாணவர்களின் பங்களிப்புடன் இவர்களின் நாட்டிய நாடகமொன்று மேடையேறுகின்றது. அவர்களின் அயராத பங்களிப்புக்கு தமிழ்ச்சங்கத்தின் சார்பில் எமது வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகுக.

அன்னிய சூழ்நிலையில் எமது தலைமுறை தனது தனித்துவத்தைப் பேணி நாம் ஒரு தமிழ்ச்சமூகமாக வாழ இவை துணை நிற்கும்.

இவ்விழாவில் எமது பாடசாலை மாணவர்கள் சங்கத்தின் மாதர் அணி பங்குபற்றி விழா சிறப்பாக நடைபெற பங்களிப்பை நல்குவது எமக்கு பெரும் மகிழ்ச்சியையும் ஆத்ம திருப்தியையும் அளிக்கின்றது. வாழிய உங்கள் தமிழ்ப்பணி. வாழிய தமிழ்!

அன்புடன்

**திரு குகன்**

தலைமை ஆசிரியர் - வோல்ம் பொறஸ்ட் தமிழ்ப்பாடசாலை

28.10.2017

tel : +44 20 8503 6643 fax: +44 20 8521 3967
59 - 61, Hoe Street | Walthamstow London E17 4QR
e-mail: info@wfts.org.uk web : www.wfts.org.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழவையின் முத்தமிழாரம் சிறக்க வாழ்த்துக்கள்

தமிழவையின் முத்தமிழாரம் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற எமது வாழ்த்துக்கள்.

தமிழவையின் ஆரம்ப காலத்திலிருந்து எமது நடனப்பள்ளியான நர்த்தன கலாலயா மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்றது. தமிழவையின் பல நாட்டிய நாடகங்களை எமது மாணவிகள் திறம்பட அரங்கேற்றி எமது கலாலயத்திற்கும் தமிழவைக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள். இங்கிலாந்தில் மட்டுமன்றி தமிழகத்திலும் தமிழவையுடன் இணைந்த எமது நிகழ்ச்சிகள் அரங்கேறி கடல் கடந்தும் எமது பெருமையை பறைசாற்றி நிற்கின்றது. தமிழவையின் நாட்டிய நாடகங்களின் மூலம் எமது மாணவிகள் எமது முன்னோரின் கலை, பண்பாடு, நாகரிகம், வீரம் ஆகியவற்றினை முழுமையாக அறிந்து கொள்ள வாய்ப்பேற்பட்டிருக்கின்றது.

புலவர் திரு சிவநாதன் அவர்களின் முழு வீச்சில் தமிழவை இன்னும் பல பிரமாண்டமான படைப்புக்களை எம்மோடு இணைந்து நடாத்த வேண்டும் என வேண்டிக்கொள்கின்றேன். இதன் மூலம் எமது இளம் நடனத் தாரகைகளுக்கு எமது விழுமியங்களை மெலும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. இங்கிலாந்தில் தமிழும் கலைகளும் செழிப்பொடு வாழ, தமிழவை இன்னமும் திறம்படச் செயலாற்ற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

அன்புடன்

**திருமதி பத்மினி குணசீலன்**

நிறுவனர்

நர்த்தன கலாலயா

28.10.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரிய நெறியில் செல்லா விட்டால் - உலகை
சூரிய விழிகளால் சுட்டுப் பார்ப்போம்!

**கவிஞர் சுரா**
(எ) சு.இராமச்சந்திரன்
தலைவர்
**செந்தமிழ் அறக்கட்டளை**
178, கே.வி.பி.தோட்டம்
இராஜா அண்ணாமலைபுரம்
சென்னை -600 028

பதிவு எண். : 16/2013
அலுவலகம் :
38/1, ராஜீவ்காந்தி நகர்
நான்காம் மேற்குத் தெரு
திருவில்லிபுத்தூர்-626 135
விருதுநகர் மாவட்டம்
அலைபேசி : 090250 58999
088709 79989

நாள் : 13-09-2017

பெறுநர்

கவிப்பேரொளி புலவர் **ந. சிவநாதன்**
'**தமிழவை**' இலண்டன்

என் நெஞ்சமும் சிந்தையும் நிறைந்த என்னருமைத் தமிழ்த் தொண்டர் கவிப்பேரொளி அவர்களுக்கு, அன்புடன் **கவிஞர் சுரா** எழுதிக் கொள்வது.

ஐயா! தாங்கள் நிறுவியுள்ள '**தமிழவை**' அமைப்பின் 18 ஆம் ஆண்டுவிழா நடைபெற இருப்பதை அறிந்து அகம் மகிழ்கிறேன். தாங்கள் பல்வேறு நாட்டிய நாடகங்களையும் கவியரங்குகளையும் பல உலக நாடுகளில் நடத்தி மிகப்பெரிய தொண்டு செய்து வருகிறீர்கள். கவிதை நூல், நாடக நூல், ஆய்வு நூல் என பெரிய அளவில் வெளியிட்டும் தமிழுக்குத் தொண்டு செய்து வருகிறீர்கள். உங்களைப் போன்ற தொண்டர்கள் இருக்கும்வரை தமிழின் நிலை உயரும். தங்கள் தமிழவையின் ஆண்டுவிழா சிறக்க **செந்தமிழ் அறக்கட்டளையின்** சார்பில் என் இனிய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

(கவிஞர் சுரா)

e-mail : senthamiltrust2013@gmail.com, kavingarsura@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

இந்நாட்டில் எம்தமிழ் உறவுகள் கடந்த நூற்றாண்டின் இறுதியில் நடாத்திய கலைநிகழ்ச்சிகள், நாடகங்கள் மற்றும் இசைநிகழ்ச்சிகள் ஒரு கட்டுக்கோப்பில்லாமலும் இந்நிகழ்ச்சிகள் தரவரிசையில் சற்றே பின்னோக்கி சென்ற வேளையில் தான் எமது தமிழவை உருவாவதற்கு அடித்தளம் போடப்பட்டது.

அப்போது புலவரண்ணாவும் நானும் கட்டடத்துறையில் ஒன்றாக வேலை செய்துவந்த காலம் எமது வேலை தவிர்ந்த மற்றைய வேளைகளில் தமிழ் இலக்கியம், தாயக செய்திகள், ஆன்மீகம் எமது நாட்டு பழக்கவழக்கங்கள் பற்றியே அளவளாவுவோம். அப்படி உரையாடும் போதுதான் புலவரண்ணா தமிழவை பற்றிக் கூறினார். "நாம் தமிழவையை நிறுவி அதன்மூலம் இப்புலம் பெயர்நாட்டில் எமது இளஞ்சமுதாயத்தை ஒன்று சேர்த்து நல்ல தரமான படைப்புக்களை எமது தமிழ் சமூகத்துக்கு வளங்குவதன் மூலம் இங்கு கலை நிகழ்ச்சிகளை நடத்துபவர்களுக்கு நாம் ஓர் முன் உதாரணமாக இருக்க வேண்டும் என்றும் உரையாடினோம்.

புலவரண்ணாவின் வில்லிசை, நாட்டிய நாடகங்கள், கருத்தரங்கம், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகள் அவ்வப்போது நடைபெற்று வந்த காலம் அவரது இல்லத்தில் ஒரு சிறிய மண்டபத்தை அமைத்து அதில் எமது தமிழவையை அங்குரார்ப்பணம் செய்தோம். எமது அவை சிறிது சிறிதாக விருச்சம்விட்டு இன்று 18வது அகவையில் காலடி எடுத்து வைப்பதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியும் இன்னும் பல வழிகளில் சிறந்து விளங்கிட ஆவன செய்வோம் எனவும் கூறி எல்லாம் வல்ல இறைவனை வேண்டி விடைபெறுகின்றேன்.

**மனோகரன்**
(தமிழவை ஆரம்பகால உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழவையைப் போற்றிடுவோம்!

தேமதுரத் தமிழ் மொழியை
மூமதுரைக் காலமுதல்
வாயாரப் போற்றிவளம் சேர்த்த வரலாற்றை
யாம் வியக்கும் வண்ணம்
ஞாலத்தோர் நன்கறிவர்.
பாராண்ட வேந்தர் குடை நிழலில்
வேரோடி விளையாடிச்
செழித்து நடமிட்ட சீர்மிகுந்த செம்மொழியின்
வன்னப் புதுமையின் வயப்பட்ட பாவாணன்
நாவல்லான் நல்லதம்பி சிவநாதப் புலவனவன்
நாடோடி வந்தாலும் நலிவின்றிச் சலிக்காது
வீடோடி ஒதுங்காது விழிமூடி நலியாது
தரணியிலே தனித்துவமாய்த்
தமிழவையைத் தாபித்தான்!
இலண்டன்மா நகரத்தில்!
புவலநீ நீடு வாழிய!
தொண்டர் பலர் கை கொடுக்க
தொடர்ந்து பல்லாண்டு
முத்தமிழின் வித்துவத்தை
நித்திலத்தில் நிலை நிறுத்தி
எத்திசையும் புகழ் பரப்பத்
தமிழவையைப் போற்றிடுவோம்!

**கந்தசாமி மனோகரன் M.A**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழவைக்கு என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள

அரங்கியல் துறையில் ஒரு அசாத்தியமான திறமை. இலண்டன் க்ரீன்போர்ட் மண்டபத்தில் முத்தமிழின் முழக்கம். இலண்டன் தமிழவை முத்தமிழாரம். முத்தாய்ப்பாக அமைகின்றது. புலம்பெயர்ந்த நாடுகளில் பல புழுக்கங்களுடன் இருக்கின்ற எம் மக்களையும் எமது இளைய சமுதாயத்தையும் தட்டி எழுப்பவும், கட்டியெழுப்பவும், தமிழையும், தமிழ்க்கலை, கலாச்சாரங்களையும், விழுமியங்களையும் எம் மக்கள் மத்தியில் புகுத்தவும் இலண்டன் மாநகரில் வேர்விட்டு விருட்சமாக விளங்குகின்றது இலண்டன் தமிழவை.

ஈழத்து முதுதமிழ் புலவர் அமரர் ஐயா நல்லதம்பி புலவர் அவர்களின் அருந்தவப் புதல்வன் என் பாசத்துக்கும், மதிப்புக்கும், மரியாதைக்குமுரிய அண்ணா புலவர் ந.சிவநாதன் அவர்களின் எண்ணத்தில் கருக்கட்டி பிறந்த இந்த தமிழவை இன்று முத்தமிழையும் எம் இளைய தலைமுறைக்கும் புலம்பெயர்ந்து இங்கு வாழும் எம் மக்களுக்கும் வழங்கும் அளப்பரிய கைங்கரியத்தை செய்து வருகின்றது.

எம்மிடையே இப்படி செய்யவேண்டிய தேவையுமிருக்கின்றது.
அந்நிய நாட்டிலே தழிழுக்காக ஒரு பலமான தமிழ் கோட்டையை கட்டி எழுப்புவது தனி ஒருவரால் முடியுமா என்ன? முடியாது. அன்புப்புலவர் அண்ணாவின் தம்பிமார் பலர் தூண்களாக எழுந்து நின்றே இந்த தமிழ் அமைப்பினை கட்டி எழுப்பியுள்ளார்கள். திருவாலவர்கள் சூ.யோ.பற்றிமாகரன், பால.இரவீந்திரன், திருமதி.பத்மினி குணசீலன் போன்ற பலரின் பங்களிப்பு இலண்டன் தமிழவையை பலப்படுத்துகின்றது. மேன்மைப்படுத்துகின்றது.

தான் சுமந்துகொண்டு இருக்கின்ற தமிழ்க் காவை தனது அடுத்த சந்ததியினருக்கு தோள் மாற்ற புலவர் அண்ணா அவர்கள் எடுக்கும் முயற்சி விதந்து போற்றத்தக்கது. வாய்விட்டுப் புகழ்கின்ற விதத்தில் இரவுபகலாக அவர் ஓடியோடி இந்த முத்தமிழாரத்தின் அரங்கியல் நிகழ்ச்சிக்காக உழைத்த உழைப்பு நிச்சயமாக விந்தை நிறைந்த வினோதம் என்றே சொல்லவேண்டும். பசி மறந்து, தூக்கம் இழந்து அவர் பட்ட துன்பங்கள் எல்லாம் முத்தமிழாரத்தின் வெற்றியில் பறந்து போகட்டும். கண்டிப்பாக களைகட்டும். பாலும்,தேனமுதும் பழரசமும் சொட்டும். பல்திசையும் இதுபற்றி பாமுரசு கொட்டும். பாராட்டுக் கரகோஷம் மண்டபமோட்டைப் போய் முட்டும். வித்தகர் பலரின் வினைத்திறனை ஒன்றாக்கி முத்தமிழாரத்தை தமிழ் மக்களுக்கு சூட்டிய இலண்டன் தமிழவைக்கு என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

**கோவிலூர் செல்வராஜன்**
பல்துறைக் கலைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

தமிழவை எனும் உணர்வும் உரிமையும் உண்மையும் கொண்ட தமிழ்ச்சபை இங்கிலாந்தில் ஆற்றும் தமிழ்ப்பணி கண்டு இறுமாந்து நிற்கின்றேன்.

மெல்லத் தமிழினிச் சாகும் எனும் கூற்றினை பொய்யாக்கி தமிழ் இனி எல்லோர்க்கும் இனிப்பாகும் எனும் பாங்கில் தமிழவையின் செயற்பாடுகள் ஒருங்கமைந்து நிற்கின்றன.

"ஆன்றோர் அறிவும் சான்றோம் சால்பும் தோன்றாத் துணையாகக் கொண்டது அவையே" எனும் தாரக மந்திரத்தை ஓங்கி ஒலித்திடும் திருச்சபையாக பெரும் சபையாக தன்னை நிலை நிறுத்தி இயல், இசை, நாடகம், எனும் முத்தமிழையும் ஒன்றாக்கி ஒரே மேடையில் பாட்டாகி, பண்ணாகி, ஒலியாகி, ஒளியாகி முழுநிலவாகி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் ஒலிப்பொருளை ஓங்கி ஒலிக்கின்ற பெரும் திரள் கொண்ட மேன்மக்களை இணைக்கின்ற ஒப்பற்ற விழா முத்தமிழ் விழா. ஆம் இச்சிறப்பு தமிழர்விழா, கலைவிழா, காவியவிழா, நாடகவிழா, நாட்டியவிழா, இசைவிழா, கவிவிழா, தமிழ்விழா சிறப்புற
இறையருள் வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

நாளும் தமிழ் வாழும் தமிழ்

**அ ஆ இ.... உயிர்மொழி**
**துரை.சிவபாலன்**
25.10.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

QHELP INTERNATIONAL

Quality | Health & Safety | Environmental | Leadership | People & Performance

# We Are QHelp

## Listen; Learn; Live: Lead



*Education Bridging Cultures*

## Our Approach

Within the organisation's and people that we work with, we aim to generate and develop awareness of the importance of Conformance, Compliance, Consistency, Continual improvement and Customer satisfaction

## Life-long learning & development for business improvement

Through the concept of "from the classroom to the boardroom" we develop, manage and deliver networking events in seminars, workshops and conferences. These are designed to develop business and people to be confident, comfortable and competent to control, challenges and changes.

## Coaching, mentoring and support

Enabling current and future business leaders to achieve recognition against international standards from recognised institutions, associations and professional bodies, based in the UK and recognised across the world as global authorities and benchmarks. This supports people's continuous professional development (CPD) and aligns with the continuous improvement and growth plans of the organisation

## Assessment, Audit, Evaluation and Solution Provision

Working with decision makers and key people to identify and understand business critical area for development. By assessing and evaluating at all levels, we can support the implementation and ongoing development of systems to comply with recognised management and business standards and models across all areas of Q-helps expertise and that of its partners.

*WE HELP YOU DEVELOP YOUR PEOPLE*

*WE HELP YOU IMPROVE YOUR BUSINESS*

*WE HELP YOU MAXIMISE YOUR PERFORMANCE*

**GLENN DUGGLEBY** T: +44 (0)1189 894625 M: +44 (0)7775 794557 E: glenn@q-helpinternational.com QH House, 17 Helmes Crescent, Wokingham, Berks RG41 2SE

Quality Health & Safety Enviromental Leadership People & Performance

www.q-helpinternational.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thamizhavai supported CHRF UK in their charity work

Visited disabled people in April and August 2016. Mobility aids such as 3-wheeler, auto, motor bikes were given to improve mobility and to earn an income. Also helped to open shops, gave water pumps, fishing boat and nets, and parts for a cycle repair shop for livelihood. Most of the disabled people are amputees and paraplegics. We also constructed over 40 wells for the disabled people in 2016.





8 people were given 3-wheel motor bikes, 4 people safari motor bikes, above young amputee girl





Water pump for the man in yellow shirt. He has lost his left arm around elbow. He is married with 2 children. very keen gardener. 2nd photo A paraplegic was given a water pump







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Names of Participants

*** Orchestra** by students of

Mrs. Thushianthy Thiyagarajah: *Vidushini Selvarajah, Shaumia Muthulingam, Sangavi Saravanapavan, Keerthika Yoganathan*

Mrs. Sukirthakala Kadatcham: *Smiruthi Pushparajasarma, Laavanja Thavarajah*

Mrs. Sivatharini Sahathevan: *Jeevana Jeganathan, Janaki Jeganathan*

Mr. P. Kirupakaran: *Rahul Ravichandran, Saran Kangatharan, Roshan Iynkaran, Sajjan Kandeepan*

T. Raghavaraman: *Viskarlya Vijayakumar*

*** Youth Debate** by students Aruna Udhayam Tamil School

*Emalya Maheswararajah, Mathusa Sooriyakumar, Rupeka Sivakumar, Jathushan Yogarasa, Vinushan AlexJenarthanan, Mauran Murugiah, Keeththana Balasubramaniam, Sethuja Gangatharan, Thinesa Pushparatha*

*** Learned Scholarly's Debate** - Led by Mr. S J Fatimaharan

*Mrs. Rita Fatimaharan, Mrs. Ananthy Kuhachandran & Dr. Baskaran*

*** "Kalaimakal Kaviyarul"** by students of Mrs. Pathmini Gunaseelan

***Shivan:*** *Sai Bhanumanjari Kanthagnany,* ***Parvathy:*** *Abinayah Vijayakumaran,* ***Thamil Thai:*** *Menuja Vijayakumar,* ***Saraswathy:*** *Shambavi Arulkumar,* ***Kambar:*** *Nirusha Nirmalan,* ***Lakshmi:*** *Menuja Pirapaharan,* ***Vishnu:*** *Luxa Mahenthiran,* ***Narrators:*** *Harani Brahma Rajaratnam, Preyantha Pasgarathasan, Mayuraah Ravindran,* ***Rama & Sun:*** *Ramiya Pratheepan,* ***Sita:*** *Lavenja Pirapaharan,* ***King:*** *Lakshanya Nithikaran,* ***Poets:*** *Laxy Pratheepan, Rahavi Sivakumar, Mathumetha Sathiyamoorthy,* ***Thiruvalluvar:*** *Harni Nagarajah,* ***Sages:*** *Lojetabriyangaa Manipallavarajan, Sabithabriyanganga Manipallavarajan, Sujanthy Raventhiran,* ***Sadaiappan:*** *Saainthavi Rajananthakumar,* ***Horse rider:*** *Kasthuri Sivakumar,* ***Sevvai & Ampikapathy:*** *Shalini Ravindran,* ***Chandran & Amarapathy:*** *Sivagowry Sinnarasa,* ***Puthan:*** *Roshinie Muhunthan,* ***Guru:*** *Sujany Raventhiran,* ***Sani:*** *Shopeitha Ravithas,* ***Sukran:*** *Sarusha Sivathas,* ***Ketu:*** *Heera Naguleswaran,* ***Ragu:*** *Nironaa Nirmalan.*

*** Comedy Drama** by students of Southend Tamil School

*S. Saken, K. Pirunthan, U. Saimeeran, T. Nilakshiya, P. Annirvan, S. Varnika, S. Vinuja, S. Vinukan, S. Veenu, K. Abinaya, T. Sanjeevan*

*** Kavignar Kuralarangam** - Led by Mr. Pulavar Sivanathan

*Sivasri Naganathasiva Kurukkal, Mr. Sivapalan & Mr. Bala Ravi*

*** "Uyil" Drama**

*Dr. Anantha Sayanan, Mrs. Rajani Anantha Sayanan, Mrs. Chitra Umapathisivam Mr. Seralathan, Mr. Jeyaharan, Mrs. Anju Ram, Mr. Rahul Ravichandran*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chennai Dosa
Finest South Indian Restaurant Chain

# >Pure Vegetarian Restaurant




chennaidosa-vegetarian.co.uk


Tel: 0207 998 0370 | Mob: 07956 919 511
339 High Street North, Manor Park, London E12 6PQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print | Tel: 020 8503 6643